# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 83/7 — 1980 අප්‍රේල් 10 වැනි බ්‍රහස්පතින්දා — 1980.04.10

83/7 ஆம் இலக்கம் — 1980 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I) — பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

எல். டி.—பி. 21/78

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்**

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 140 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச்சட்டம்.

டப்ளிவ். எம். ஏ. விஜேரட்ன பண்டா,
செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு, மார்ச் 28, 1980

### கட்டளைச்சட்டம்

1. இக்கட்டளைச்சட்டம் 1980 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பட்டவகுப்புக்கு மேற்பட்ட மருத்துவக்கல்வி நிறுவகக் கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், 1980 ஆம் ஆண்டு ஏப்பிரில் மாதம் 10 ஆம் தேதியன்று வலுவிற்கு வருதலும் வேண்டும்.

2. சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்டதும், 1979 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆம் தேதிய 38/2 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்டதுமான 1979 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, பட்டவகுப்புக்கு மேற்பட்ட மருத்துவக்கல்வி நிறுவகக் கட்டளைச்சட்டம், மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏலவே செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் நீக்கப்படுகின்றது.

3. இக்கட்டளைச்சட்டம் நடைமுறைக்கு வந்தவுடன், பட்டவகுப்புக்கு மேற்பட்ட மருத்துவக் கல்வி நிறுவகம் என அறியப்படும் ஒரு நிறுவகம் (அது இதனகத்துப் பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்படல் வேண்டும்.

4. இந்நிறுவகம், இலங்கைக் கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படல் வேண்டும்; இப்பல்கலைக்கழகம் இதனகத்துப்பின்னர் "பல்கலைக்கழகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்.

5. சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகட்கும், ஆணைக்குழுவின் தத்துவங்கள் ,கடமைகள், பணிகள் என்பனவற்றிற்கும் அமைய, நிறுவகமானது பின்வருவனவற்றைச் செய்வதற்குத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) மாணவரை அனுமதித்தல் ;

(ஆ) நிறுவகத்தினதும் பல்கலைக்கழகத்தினதும் விதப்புரையின் பேரில், ஆணைக்குழு அங்கீகரிக்கக்கூடியவாறாக மருத்துவக் கல்வியின் அத்தகைய சிறப்புக்கூறுகளில் பட்டவகுப்புக்கு மேற்பட்ட போதனை, பயிற்சி, ஆராய்ச்சி ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்தல் ;

(இ) மருத்துவக் கல்வியின் பல்வேறு சிறப்புக்கூறுகளிலும் வழங்கப்பட வேண்டிய பட்டவகுப்புக்கு மேற்பட்ட பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள், வேறு கல்விச் சிறப்புகள் ஆகியவற்றைப் பல்கலைக்கழகத்தின் அங்கிகாரத்துடனும் ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடனும் நிர்மானித்தல் ;

(ஈ) பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்தோடு, மருத்துவக் கல்வியின் பல்வேறு சிறப்புக்கூறுகளிலும் தேர்ச்சிபெற்றுள்ள ஆட்களை நிச்சயிக்கும் நோக்கத்துக்கெனப் பட்டவகுப்புக்கு மேற்பட்ட தேர்வுகளை நடாத்துதலும், அத்தகைய தேர்வுகளில் சித்தியடைந்திருப்பதோடு நிறுவகத்தின் கலந்தாலோசனையுடன் பல்கலைக்கழகம் துணைவிதிகளினால் விதித்துரைக்கக்கூடிய அத்தகைய வேறு நிபந்தனைகளையும் திருப்திசெய்துள்ள ஆட்களைப் பல்கலைக்கழகத்தின் பட்டவகுப்புக்கு மேற்பட்ட பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள், வேறு கல்விச் சிறப்புக்கள் ஆகியவை வழங்குவதற்குத் தகவுடையவரென விதந்துரைத்தலும் ;

(உ) ஆசிரியர், மாணவர், கல்விமான்கள் ஆகியோரைப் பரிமாற்றுவதன் மூலம் அல்லது வேறு வகையில், நிறுவகத்தின் நோக்கங்களோடு ஒத்த அல்லது கணிசமான அளவு ஒத்த நோக்கங்களைக் கொண்டவையும், இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் உள்ளவையும் ஆன பல்கலைக்கழகங்களுடன் அல்லது நிறுவனங்களுடன் ஒத்துழைத்தல் ;

(ஊ) துணைவிதியினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறாகப் பல்கலைக்கழகங்களிலும் பல்கலைக்கழக மட்டத்திலான கல்வி இடங்களிலும், நிறுவகத்துக்கு அனுமதி கோரும் ஆட்

கள் அல்லது நிறுவகத்திலுள்ள மாணவர்கள் சித்தியடைந்த தேர்வுகளையும் கல்விக் காலங்களையும் அல்லது கற்கைக் காலங்களையும், நிறுவகத்தின் அத்தகைய தேர்வுகட்கும், கல்விக் காலங்களுக்கும் அல்லது கற்கைக் காலங்களுக்கும் அல்லது அவற்றின் அத்தகைய பாகங்கட்கும் சமமானதென அங்கீகரித்தலும் எந்நேரத்திலும் அத்தகைய அங்கீகாரத்தைக் கைமீட்டலும் ;

(எ) நிறுவகத்தின் நோக்கத்திற்காக நூலகங்கள், ஆய்வுகூடங்கள், வேறு கட்டிடங்கள் ஆகியவற்றைப் போதனை அல்லது பயிற்சி அல்லது ஆராய்ச்சி நோக்கங்களுக்காக நிறுவுதலும், அவற்றிற்கு வசதியமைத்தலும், அவற்றைப் பேணுதலும் ;

(ஏ) ஆராய்ச்சிப் படிப்புப் பரிசில்கள், புலமைப் பரிசில்கள், புலமைப் பொருளுதவிகள், ஏழைக் கல்வியுதவிகள், பதக்கங்கள், வேறு பரிசில்கள் ஆகியவற்றை ஏற்படுத்தலும் வழங்கலும் ;

(ஐ) ஆராய்ச்சிகளையும் கற்கைநெறிகளையும் அல்லது அவற்றின் பாகங்களையும் பல்கலைக்கழகத்துக்கும் நிறுவகத்துக்கும் வெளியேயுள்ள இடங்களில் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யும் ஏதேனும் துணைவிதிக்கிணங்க அவற்றை அவ்வாறு நடாத்துதற்கு ஒழுங்குகள் செய்தல் ;

(ஒ) பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடன் நிறுவகத்தினால் அங்கிகரிக்கப்படக்கூடியவாறாக அத்தகைய ஆட்களை நிறுவகத்தின் ஆசிரியர்களைளாகவும், தேர்வாளர்களாகவும் ஏற்றுக் கொள்ளல் ;

(ஓ) கட்டணங்களைக் கோரிப்பெற ஏற்பாடுசெய்யும் ஏதேனும் விதிக்கிணங்க அவ்வாறு செய்தல் ; அத்துடன்

(ஔ) நிறுவகத்தின் குறிக்கோள்களை முன்னேற்றும் நோக்கத்திற்காக அவசியமாகக்கூடிய அத்தகைய வேறெல்லாச் செயல்களையும் காரியங்களையும், அவை மேற்கூறிய தத்துவங்களின் இடைநேர்விளைவானவையாயினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி, செய்தல்.

6. பின்வருவோர் நிறுவகத்தின் அலுவலராக இருத்தல் வேண்டும் :—

(அ) பணிப்பாளர் ; அத்துடன்

(ஆ) எப்பதவியை வகிப்பவர் இந்தப் பந்தியின் நோக்கத்துக்காக ஓர் அலுவலராக இருக்கிறாரோ, அந்தப் பதவி எனக் கட்டளைச் சட்டத்தால் வெளிப்படுத்தப்பட்ட வேறு ஏதேனும் பதவியை வகிப்பவர்.

7. (1) 1979 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, பட்டவகுப்புக்கு மேற்பட்ட மருத்துவக் கல்வி நிறுவகக் கட்டளைச்சட்டத்தின் 7 ஆம் பந்தியின் (1) ஆம் உட்பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட முதற் பணிப்பாளர், இக்கட்டளைச் சட்டம் நடைமுறைக்கு வருவதன் மேல், அக்கட்டளைச்சட்டம் நீக்கப்பட்டிருப்பது எப்படியிருப்பினும் நிறுவகத்தின் முதற் பணிப்பாளராகத் தொடர்ந்தும் தம் பதவியை வகித்தல் வேண்டும். அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அல்லது (4) ஆம் உட்பந்தியின் கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, அவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்றாண்டுக் காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(2) அடுத்துவரும் ஒவ்வொரு பணிப்பாளரும், நிறுவகத்தின் முகாமைச்சபை விதந்துரைத்த மூன்று ஆட்களைக் கொண்ட குழாத்திலிருந்து ஆணைக்குழுவினால் நியமிக்கப்படல் வேண்டும். ஓர் உயர் கல்வி நிறுவனத்தின் பணியாட்டொகுதி உறுப்பினர் ஒருவர் பணிப்பாளராக நியமிக்கப்பட்டவிடத்து, அத்தகைய நிறுவனம், அத்தகைய பணியாட்டொகுதி உறுப்பினரைப் பணிப்பாளர் பதவி ஏற்கவென விடுவித்தல் வேண்டும்.

(3) ஒவ்வொரு பணிப்பாளரும், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அல்லது (4) ஆம் உட்பந்தியின் கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, அவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்றாண்டு காலப்பகுதிக்கு, அல்லது அவர் தமது அறுபத்தைந்தாம் ஆண்டை நிறைவுசெய்யும் வரை இவற்றுள் எது முதல் நிகழ்கின்றதோ அது வரை, பதவி வகித்தல் வேண்டும்.

(4) பணிப்பாளர் ஒருவர், அந்நோக்கத்துக்காகக் கூட்டப்பட்ட முகாமைச் சபையின் விசேட கூட்டமொன்றில் அதன் உறுப்பினரது மொத்தத் தொகையில் மூன்றிலிரண்டு பங்கினர்க்குக் குறையாதோரால் நிறைவேற்றப்பட்ட கண்டனத் தீர்மானத்தின் பேரில் ஆணைக்குழுவின் தவிசாளரால் பதவியிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும். அத்தகைய விசேட கூட்டத்தில் சமுகமளித்த உறுப்பினர்கள், பணிப்பாளர் அல்லாத ஆள் ஒருவரை அத்தகைய கூட்டத்தில் தலைமை வகிக்கவெனத் தம்முள்ளிருந்து தெரிவுசெய்தல் வேண்டும்.

(5) பதவிதுறக்கும் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படும் ஒவ்வொரு பணிப்பாளரும், பணிப்பாளராக நியமிக்கப்படுவதற்கு உடன் முன்னர் ஓர் உயர் கல்வி நிறுவனத்தின் பணியாட்டொகுதி உறுப்பினராக இருந்திருந்தால், அவர் தம் அறுபத்தைந்தாம் ஆண்டை நிறைவாக்கியிராவிடின், அத்தகைய உயர் கல்வி நிறுவனத்திலுள்ள நிலையான தமது பதவிக்கு மீண்டும் செல்லலாம்.

(6) பணிப்பாளர், லீவு, சுகவீனம், இலங்கையில் இல்லாமை என்பன காரணமாக அல்லது வேறு காரணத்துக்காகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராயிருப்பின், ஆணைக்குழு, அத்தகைய இயலாமை ஏற்பட்டதிலிருந்து ஏழு நாட்களுக்குள், அப்பதவிக்குரிய கடமைகளைக் கொண்டு நடாத்துதற்குத் தகுந்தவையென அது கருதக்கூடிய அத்தகைய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்குகள் செய்யப்படும் வரை பல்கலைக்கழகப் பதிவாளர், அப்பதவிக்குரிய நாளாந்தக் கடமைகளைக் கொண்டு நடாத்துதல் வேண்டும்.

(7) பணிப்பாளர் பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்படின், அத்தகைய வெற்றிடம் ஏற்பட்டதிலிருந்து ஏழு நாட்களுக்குள், ஆணைக்குழு, (2) ஆம் உட்பந்தியின் கீழ் ஒரு நிரந்தர நியமனம் செய்யப்படும் வரை, அப்பதவிக்குரிய கடமைகளைக் கொண்டு நடாத்துதற்குத் தகுந்தவையென அது கருதக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்குகளைச் செய்யும்வரை, பல்கலைக்கழகப் பதிவாளர் அப்பதவிக்குரிய நாளாந்தக் கடமைகளைக் கொண்டு நடாத்துதல் வேண்டும்.

8. (1) பணிப்பாளர், நிறுவகத்தின் பிரதான நிறைவேற்று அலுவலராகவும் பிரதான கல்வி அலுவலராகவும் இருத்தல் வேண்டும். அவர் முகாமைச் சபையின் பதவிவழி உறுப்பினராகவும் ஒவ்வொரு கற்கைச் சபையினதும் பதவிவழி உறுப்பினராகவும் இருத்தல் வேண்டும். நிறுவகத்தின் வேறு எந்த அதிகார சபையையும் அல்லது குழுவினையும் கூட்டவும், அவற்றில் சமுகமளிக்கவும், பேசவும் அவர் உரித்துடையவராதல் வேண்டும் ; ஆனால், அவர் அத்தகைய வேறு அதிகாரசபையின் அல்லது குழுவின் உறுப்பினராயிருந்தாலன்றி, அத்தகைய ஏதேனும் கூட்டத்தில் வாக்களிக்க உரித்துடையவராதலாகாது.

(2) முகாமைச் சபையால் அதற்கெனப் பணிப்பாளருக்குக் காலத்துக்குக் காலம் சட்டமுறையாக விடுக்கப்படக்கூடிய அத்தகைய பணிப்புகட்கிணங்க, சட்டத்தினதும் ஏதேனும் தொதான சாதனத்தினதும் ஏற்பாடுகளை, அவை நிறுவகத்தோடு தொடர்புபட்ட அளவுக்கு, முறையாகக் கடைப்பிடித்தலை உறுதிசெய்தல் பணிப்பாளரது கடமையாதல் வேண்டும் என்பதுடன், அந்நோக்கத்துக்கு அவசியமென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய எல்லாத் தத்துவங்களையும் பணிப்பாளர் கொண்டிருத்தலும் வேண்டும் ; அத்துடன் அவர் அத்தத்துவங்களைப் பிரயோகிக்கலாம்.

(3) முகாமைச் சபையினதும் ஒவ்வொரு கற்கைச் சபையினதும் முடிவுகளுக்குப் பயனளித்தல் அல்லது பயனளித்தலை உறுதிப்படுத்தல் பணிப்பாளரின் கடமையாதல் வேண்டும்.

(4) பணிப்பாளரே நிறுவகத்தின் கணக்கீட்டு அலுவலராயிருத்தல் வேண்டும்.

(5) நிறுவகத்துள் ஒழுக்காற்றைப் பேணுவதற்குப் பணிப்பாளர் பொறுப்பாதல் வேண்டும்.

9. நிறுவகத்தின் அதிகாரசபைகள் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) முகாமைச் சபை ;

(ஆ) கற்கைச் சபை அல்லது கற்கைச் சபைகள் ; அத்துடன்

(இ) அத்தகைய அதிகாரசபைகளாகவிருப்பதற்கெனக் கட்டளைச் சட்டத்தால் விதித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய வேறு குழுக்கள்.

10. முகாமைச்சபை (அது இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பிடுசெய்யப்படும்) நிறுவகத்தின் கல்விக்குழுவாகவும் நிறைவேற்றுக் குழுவாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன், அது பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தலும் வேண்டும் :—

(1) பின்வரும் பதவிவழி உறுப்பினர், அதாவது—

(அ) பணிப்பாளர் ;

(ஆ) உயர் கல்வி எனும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர் ;

(இ) சுகாதாரம் எனும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர் ;

(ஈ) நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர் ;

(உ) சுகாதர சேவைப் பணிப்பாளர் ;

(ஊ) பகிரங்க சுகாதார சேவைகள் எனும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள சுகாதார சேவைப் பிரதிப் பணிப்பாளர் ;

(எ) மருத்துவச் சேவைகள் எனும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள சுகாதார சேவைப் பிரதிப் பணிப்பாளர் ;

(ஏ) ஆய்கூடச் சேவைகள் எனும் விடயத்திற்குப் பொறுபாகவுள்ள சுகாதாரச் சேவைப் பிரதிப் பணிப்பாளர் ;

(ஐ) இலங்கைக் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்வித் துறையின் துறைத் தலைவர் ;

(ஒ) இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்வித்துறையின் துறைத் தலைவர்.

(2) பின்வரும் வேறு உறுப்பினர், அதாவது—

(அ) இலங்கைக் கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவக் கல்வித்துறையால் (அத்துறையின் துறைத் தலைவர் நீங்கலாக) அத்துறையின் சமுதாய மருத்துவக்கல்வி, மருத்துவக்கல்வி, அறுவையியல், பெண்ணோயியல், மகப்பேற்றியல், குழந்தை மருத்துவம், உளமருத்துவம் ஆகியவற்றிற்கான பகுதிகளின் தலைவர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இரு உறுப்பினர்கள் ;

(ஆ) இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவக் கல்வித்துறையால் (அத்துறையின் துறைத் தலைவர் நீங்கலாக) அத்துறையின் சமுதாய மருத்துவக் கல்வி, மருத்துவக் கல்வி, அறுவையியல், பெண்ணோயியல், மகப்பேற்றியல், குழந்தை மருத்துவம், உளமருத்துவம் ஆகியவற்றிற்கான பகுதிகளின் தலைவர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இரு உறுப்பினர்கள் ;

(இ) இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவக் கல்வித் துறையால், அத்துறையின் சமுதாய மருத்துவக் கல்வி, மருத்துவக் கல்வி, அறுவையியல், பெண்ணோயியல், மகப்பேற்றியல், குழந்தை மருத்துவம், உளமருத்துவம் ஆகியவற்றிற்கான பகுதிகளின் தலைவர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் உறுப்பினர் ;

(ஈ) உறுகுணை பல்கலைக்கழகக் கல்லூரியின் மருத்துவக் கல்வித் துறையால், அத்துறையின் சமுதாய மருத்துவக் கல்வி, மருத்துவக் கல்வி, அறுவையியல், பெண்ணோயியல், மகப்பேற்றியல், குழந்தை மருத்துவம், உள மருத்துவம் ஆகிய வற்றிற்கான பகுதிகளின் தலைவர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் உறுப்பினர் ; அத்துடன்

(உ) கல்வி, உயர்தொழில், விஞ்ஞான அல்லது நிருவகச் செயலலகுகளில் சிறப்புச் சேவையாற்றிய ஆட்களிலிருந்து ஆணைக்குழு நியமித்த எட்டு உறுப்பினர் ;

ஆயின், அவ்வாறு நியமிக்கப்பட்டோருள் குறைந்தது ஐந்து உறுப்பினராவது மருத்துவ உயர்தொழில் உறுப்பினர்களிலிருந்து நியமிக்கப்பட்டவராயிருத்தல் வேண்டும்.

11. (1) சபையின் தவிசாளர் சபையின் உறுப்பினரால் அவ் உறுப்பினருள் இருந்து தெரிவுசெய்யப்படல் வேண்டும் ; அவரே சபையின் எல்லாக் கூட்டங்கட்கும் தலைமைதாங்குதல் வேண்டும். தவிசாளர் ஒரு கூட்டத்தில் தலைமைதாங்க இயலாது போயின், அத்தகை கூட்டத்திற்குத் தலைமைதாங்கவென உறுப்பினர்கள், சமுகமளித்துள்ள எவரேனும் உறுப்பினரைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

(2) தவிசாளர், அவர் தெரிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து கணிக்கப்பட்ட ஓர் ஆண்டுக் காலத்துக்குத் தவிசாளராகப் பதவி வகித்தல் வேண்டும் ; அத்துடன் அவர் மீளத் தெரிவு செய்யப்படுவதற்கும் தகவுடையவராதல் வேண்டும்.

(3) நியமிக்கப்பட்ட அல்லது தெரிவு செய்யப்பட்ட எவரேனும் உறுப்பினர், முன்னரே பதவியை வறிதாக்கினலொழிய, விடயத்திற்கேற்ப அவர் தெரிவு செய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்றாண்டு காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன், பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மீளத் தெரிவுசெய்யப்பட அல்லது மீள நியமிக்கப்படத் தகவுடையவராதலும் வேண்டும் ;

ஆயின், எவ்வாறுயினும், தெரிவு செய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் தமது பதவிக் காலம் முடிவடைவதன் முன்னர் பதவியை வறிதாக்கினல், அவரை அடுத்துறுபவர், அவர் முன்னரே தமது பதவியை வறிதாக்கினலொழிய அவருக்கு முன் இருந்தவரின் பதவிக் காலத்தில் முடிவுறுதெஞ்சியுள்ள பதவிக் காலத்திற்குப் பதவி வகித்தல் வேண்டும்.

ஆயின், மேலும், தெரிவு செய்யப்பட்ட ஒவ்வோர் உறுப்பினரும், எவ் அந்தஸ்து அல்லது எவ் உறுப்பாண்மையின் பயனைக் கொண்டு சபையின் உறுப்பினர் ஒருவராகத் தெரிவு செய்யப்படுவதற்குத் தகவுடையவராயிருந்தாரோ அவ் அந்தஸ்தை அல்லது அவ் உறுப்பாண்மையைக் கொண்டிருக்கும் வரை மட்டுமே அப்பதவியை வகித்தல் வேண்டும்.

(4) சபையின் தெரிவு செய்யப்பட்ட எவரேனும் உறுப்பினர், பணிப்பாளருக்கு முகவரியிட்டுத் தமது கைப்படக் கடிதம் எழுதுவதன் மூலம் தமது பதவியைத் துறக்கலாம்.

(5) சபையின் நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினர், ஆணைக்குழுவின் தவிசாளருக்கு முகவரியிட்டுத் தமது கைப்படக் கடிதம் எழுதுவதன் மூலம் தமது பதவியைத் துறக்கலாம்.

(6) சபையின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர், வாரமைக்காய லீவு இன்றி சபையின் அடுத்துறும் மூன்று கூட்டங்களுக்குச் சமுகமளிக்கத் தவறின், சபையின் உறுப்பினர் என்ற தமது பதவியை அவர் வறிதாக்கியுள்ளார் எனக் கருதப்படல் வேண்டும் ; அதனல் ஏற்படும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆணைக்குழு தக்கவோர் ஆளை நியமித்தல் வேண்டும்.

(7) சபையின் உறுப்பினர் ஒருவர் எந்த ஊதியத்துக்கும் உரித்துடையவராதலாகாது ; ஆனல் பதவிவழி உறுப்பினர் அல்லாத உறுப்பினர் ஒருவர்க்கு, நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரைக் கலந்தாலோசித்து அமைச்சர் தீர்மானிக்கும் அத்தகைய படிகள் கொடுக்கப்படலாம்.

(8) சபையின் கூட்டமொன்றிற்கான கூட்டநடப்பெண் சபையின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்றிலொரு பங்கினதாக இருத்தல் வேண்டும்.

(9) சபை அவசியமாகும் போதெல்லாம் கூடுதல் வேண்டும்; எவ்வாறாயினும், ஓர் ஆண்டுக்கு எட்டுத் தடவைகளுக்குக் குறையாது கூடுதல் வேண்டும்.

(10) பணிப்பாளர், அவர் அவசியமெனக் கருதும் போதெல்லாம், அல்லது சபையின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்றிலொரு பங்குக்குக் குறையாத உறுப்பினர்களிடமிருந்து எழுத்திலான வேண்டுதல் கிடைக்கப் பெறுவதன் மேல் ஒரு வாரத்துக்குள், சபையின் விசேட கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

12. (1) சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, சபையானது, இக்கட்டளைச் சட்டத்தால் நிறுவகத்துக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித் தொதுக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும் என்பதோடு, கடமைகளையும், பணிகளையும், புரிதலும், நிறை வேற்றுதலும் வேண்டும்.

(2) சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, சபையானது, நிறுவகத்திலுள்ள போதனை, கல்வி, ஆராய்ச்சி, தேர்வுகள் ஆகியவற்றின்மீது கட்டுப்பாட்டையும் அவற்றின் பொது நெறிப்படுத்துகையையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஓராம் (2) ஆம் உட்பந்திகளினால் சபைக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுத்தன்மைக்குப் பங்கமின்றி, சபையானது, பின்வரும் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும் :—

(அ) நிறுவகத்தின் ஆதனத்தையும் நிதிகளையும் வைத்திருத்தலும், கட்டுப்படுத்தலும், நிருவகித்தலும் ;

(ஆ) சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கிணங்க நிறுவகத்தோடு தொடர்பான எல்லாக் கருமங்களையும் ஒழுங்குபடுத்தலும் தீர்மானித்தலும் ;

(இ) குறித்த நோக்கங்களுக்காக நிறுவகத்தின் கையடைவில் வைக்கப்பட்ட நிதிகள் எவற்றையும் நிருவகித்தல் ;

(ஈ) நிறுவகத்திற்கு அளிக்கப்படும் மரணசாதனக் கொடைகள் நன்கொடைகள், வேறு ஆதன வழங்கல்கள் ஆகியவற்றை ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன் பெற்றுக் கொள்ளலும் ஏற்றுக்கொள்ளலும் ;

(உ) நிறுவகத்தின் ஆண்டு அறிக்கையையும் ஆண்டுக் கணக்குகளையும் சீர்தூக்கிப்பார்த்தலும், அத்தகைய அறிக்கைகளையும், அத்தகைய கணக்குகளையும் பல்கலைக்கழகத்திற்கும் ஆணைக்குழுவிற்கும் சமர்ப்பித்தலும் ;

(ஊ) நிறுவகத்தின் நிதி மதிப்பீடுகளைத் தயாரித்தலும், அத்தகைய மதிப்பீடுகளைப் பல்கலைக்கழகத்திற்கும் ஆணைக் குழுவிற்கும் சமர்ப்பித்தலும் ;

(எ) சம்பந்தப்பட்ட கற்கைச்சபையுடன் அல்லது கற்கைச் சபைகளுடன் கலந்தாலோசித்து மருத்துவக் கல்வியின் பல்வேறு சிறப்புக்கூறுகளில் வழங்கப்பட வேண்டிய பட்ட வகுப்புக்கு மேற்பட்ட பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள், வேறு கல்விச் சிறப்புக்கள் ஆகியவற்றையும், அத்தகைய பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள், வேறு கல்விச் சிறப்புக்கள் ஆகியவற்றிற்குத் தகைமைபெற விரும்பும் மாணவர் பின்பற்ற வேண்டிய கற்கைநெறிகளையும் பயிற்சியையும், சித்தியடைய வேண்டிய தேர்வுகளையும் திருப்திசெய்யவேண்டிய நிபந்தனைகளையும் பல்கலைக்கழகத்திற்கு விதந்துரைத்தல்.

(ஏ) எக்கருமம் தொடர்பில் துணைவிதிகள் ஆக்கப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்பட்டதோ, அக்கருமத்துக்காகத் துணைவிதிகளை வரைதலும், சட்டமாக்கப்படுவதற்காக அத்தகைய வரைவுகளைப் பல்கலைக்கழகப் பேரவைக்குச் சமர்ப்பித்தலும் ;

ஆயின், எவ்வாறாயினும், கற்கைச்சபையினால் அல்லது கற்கைச் சபைகளினால் செய்யப்பட்ட அறிக்கைகளைச் சீர்தூக்கிப் பார்த்த பின்னர் அன்றி, சம்பந்தப்பட்ட கற்கைநெறிகள், தேர்வுகள் என்பன தொடர்பான துணைவிதி எதுவும் வரையப்படுதலாகாது ;

(ஐ) சம்பந்தப்பட்ட கற்கைச் சபையினால் அல்லது கற்கைச் சபைகளினால் செய்யப்பட்ட அறிக்கைகளைச் சீர்தூக்கிப் பார்த்த பின்னர், கற்கைநெறிகள், தேர்வுகள் ஆகியவை தொடர்பிலான ஒழுங்குவிதிகளை வரைதலும், சட்டமாக்கப்படுவதற்காக அத்தகைய வரைவுகளைப் பல்கலைக்கழக மூதவைக்குச் சமர்ப்பித்தலும் ;

(ஒ) எக்கருமம் தொடர்பில் விதிகள் ஆக்கப்படுதல் வேண்டுமென அல்லது ஆக்கப்படலாமென அதிகாரமளிக்கப்பட்டதோ அக்கருமத்துக்காக விதிகளை வரைதலும், விடயத்திற்கேற்ப, சட்டமாக்குவதற்காக அத்தகைய வரைவுகளைப் பல்கலைக்கழகத்தின் பேரவைக்கோ அல்லது மூதவைக்கோ சமர்ப்பித்தலும் ;

(ஓ) நிறுவகத்தின் வேலையைக் கொண்டு நடாத்துவதற்குத் தேவையான கட்டிடங்கள், வளவுகள், தளபாடங்கள், சாதனங்கள், வேறு பொருள்கள் ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்தல் ;

(ஔ) சம்பந்தப்பட்ட கற்கைச் சபையின் அல்லது கற்கைச் சபைகளின் கலந்தாலோசனையுடன் நிறுவகத்தின் ஆசிரியர், தேர்வாளர் என்போராக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு ஏற்ற அத்தகைய ஆட்களைப் பல்கலைக்கழகத்தின் பேரவைக்கு விதந்துரைத்தல் ;

(க) சம்பந்தப்பட்ட கற்கைச் சபையின் அல்லது கற்கைச் சபைகளின் அறிக்கைகளைச் சீர்தூக்கிப் பார்த்த பின்னர், பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்தோடு ஆணைக்குழுவிற்குப் பின்வருவன பற்றி விதந்துரைத்தல் :—

(i) இப்பொழுதுள்ள கற்கைச் சபைகளை மீளவமைத்தற்கும் புதிய கற்கைச் சபைகளை அமைத்தற்குமான திட்டங்கள் ; அத்துடன்

(ii) மருத்துவக் கல்விச் சிறப்புக்கூறுகளை அந்தந்தக் கற்கைச் சபைகளுக்குக் குறித்தொதுக்குதல் ;

(ங) தகுந்தவையென அது கருதக்கூடிய அத்தகைய எண்ணிக்கையினவான நிலையியற் குழுக்களை அல்லது நிமித்தக் குழுக்களை நியமித்தலும், அவற்றின் விசாரணை விடயங்களைக் குறித்துரைத்தலும், அவற்றின் அறிக்கைகளை ஆராய்ந்து அத்தகைய அறிக்கைகளைத் திரிபுடனோ திரிபுகளின்றியோ அங்கீகரித்தலும் அல்லது அத்தகைய அறிக்கைகளை நிராகரித்தலும் ;

(ச) சம்பந்தப்பட்ட கற்கைச் சபையின் அல்லது கற்கைச் சபைகளின் கலந்தாலோசனையுடனும் பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடனும் கற்கை நெறிகட்கு மாணவரை அனுமதிப்பதற்கான தேவைப்பாடுகளைத் தீர்மானித்தல் ;

(ஞ) பயன்படுத்தப்படாத ஏதேனும் வருமானம் உட்பட, நிறுவகத்துக்குச் சொந்தமான எவையேனும் பணங்களை, நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ், அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் கீழ், நம்பிக்கைப் பொறுப்புப் பணங்களை எப்பிணைப்பொறுப்புக்களில் முதலீடு செய்தல் சட்டமுறையானதோ, அப்பிணைப்பொறுப்பு எதிலும் முதலீடு செய்தலும், அல்லது ஆணைக்குழுவின் அங்கீகாரத்தோடு, அத்தகைய எவையேனும் பணங்களை இலங்கையிலுள்ள அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்வதில் முதலீடுசெய்தலும், அல்லது அத்தகைய முதலீடுகளை வேறுபடுத்தலும், அல்லது உடனடிச் செலவுக்குத் தேவைப்படாததான அத்தகைய பணங்களின் ஏதேனும் பகுதியை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வங்கியில் நிலையான வைப்பில் இடுதலும் ; அத்துடன்

(ட) இக்கட்டளைச்சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் தோதான சாதனத்தில் அவற்றைப் பிரயோகிப்பதற்கு வேறு வகையாக ஏற்பாடு செய்யப்படாதுள்ள நிறுவகத்தின் வேறு எல்லா தத்துவங்களையும் பிரயோகித்தல் :

ஆயின், சபையானது, ஏதேனும் கல்விசார் விடயம் பற்றித் தோதான கற்கைச்சபை அதன் அபிப்பிராயத்தைப் பதிந்து சபைக்கு அனுப்பிவைப்பதற்கான சந்தர்ப்பத்தை அக்கற்கைச் சபைக்கு முதலில் கொடுத்திருந்தாலொழிய, கல்விசார் விடயம் தொடர்பான தீர்மானம் எதுவும் சபையினால் நிறைவேற்றப்படுத்தலாகாது.

ஆயின், மேலும், பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடன் அன்றி அவ்வாறு நிறைவேற்றப்பட்ட எத்தீர்மானத்தின் மீதும் செயலாற்றுதலாகாது.

இப்பந்தியில் "கல்விசார் விடயம்" என்பது தோதான கற்கைச்சபையின் கட்டுப்பாட்டிற்கும் பொதுப் பணிப்புக்கும் அமைந்த ஏதேனும் விடயம் என்று பொருளாகும்.

13. கீழ்வரும் மருத்துவக் கல்விச் சிறப்புக்கூறு ஒவ்வொன்றிற்கும், அத்துடன் முகாமைச் சபையினதும் பல்கலைக்கழகத்தினதும் விதப்புரையின் பேரில் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு மருத்துவக் கல்விச் சிறப்புக்கூறு ஒவ்வொன்றிற்கும், நிறுவகம் ஒரு கற்கைச்சபையைத் தாபித்தல் வேண்டும் :—

(அ) உணரழிவியல் ;
(ஆ) சமுதாய மருத்துவம் ;
(இ) பல்நோய் அறுவையியல் ;
(ஈ) குடும்ப மருத்துவமும் பொது மருத்துவத் தொழிலும் ;
(உ) மருத்துவம் ;
(ஊ) பெண்ணோயியலும் மகப்பேற்றியலும் ;
(எ) கண்மருத்துவம் ;
(ஏ) நோயியல் ;
(ஐ) குழந்தை மருத்துவவியல் ;
(ஒ) உளமருத்துவவியல் ;
(ஓ) இரேடியோவியல் ; அத்துடன்
(ஔ) அறுவையியல்.

14. (1) இலங்கையிலுள்ள ஒரு பல்கலைக்கழகம் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் அல்லது ஒரு பல்கலைக்கழகக் கல்லூரி அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரிகள் எந்தச் சிறப்புக்கூறுக்காக ஒரு கற்கைப் பகுதியைத் தாபித்துள்ளதோ அல்லது தாபித்துள்ளனவோ, அந்தச் சிறப்புக்கூறு தொடர்பில் ஒரு கற்கைச் சபை தாபிக்கப்பட்டுள்ளவிடத்து, அக்கற்கைச் சபை பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) பணிப்பாளர் ;

(ஆ) இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களுள் அல்லது பல்கலைக்கழகக் கல்லூரிகளுள் ஏதேனுமொன்றில் அல்லது சுகாதார அமைச்சில் அல்லது அதன் ஏதேனும் திணைக்களத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள அல்லது தொழிலுக்கமர்த்தப்பட்டிருந்த தோதான உயர்தொழிற் குழு உறுப்பினரிடையே இருந்து அத்தகைய உயர்தொழிற் குழுவால் தெரிவுசெய்யப்பட்ட ஐந்து உறுப்பினர் ;

(இ) இலங்கையிலுள்ள ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் அல்லது பல்கலைக்கழகக் கல்லூரியினதும் தோதான கற்கைப் பகுதியின் தலைவர் ;

(ஈ) இலங்கைக் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்வித்துறையால், அத்துறையின் பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், சிரேட்ட விரிவுரையாளர்கள் ஆகியோரிடையே இருந்து தெரிவு செய்யப்பட்ட ஓர் உறுப்பினர் ; அத்துடன்,

(உ) இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்வித் துறையால், அத்துறையின் பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், சிரேட்ட விரிவுரையாளர்கள் ஆகியோரிடையே இருந்து தெரிவு செய்யப்பட்ட ஓர் உறுப்பினர்.

(2) இலங்கையிலுள்ள பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழகக் கல்லூரி எதுவும் எந்தச் சிறப்புக்கூறுக்காகக் கற்கைச் சபையொன்றைத் தாபிக்கவில்லையோ அந்தச் சிறப்புக்கூறு தொடர்பில் கற்கைச் சபையொன்று தாபிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய கற்கைச் சபை பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) பணிப்பாளர் ;

(ஆ) தோதான உயர்தொழிற் குழு உறுப்பினரிடையே இருந்து அத்தகைய உயர்தொழிற் குழுவாற் தெரிவுசெய்யப்பட்ட ஐந்து உறுப்பினர் ;

(இ) இலங்கைக் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்வித் துறையால், அத்துறையின் பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், சிரேட்ட விரிவுரையாளர்கள் ஆகியோரிடையே இருந்து தெரிவுசெய்யப்பட்ட ஓர் உறுப்பினர் ; அத்துடன்

(ஈ) இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்வித் துறையால், அத்துறையின் பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், சிரேட்ட விரிவுரையாளர்கள் ஆகியோரிடையே இருந்து தெரிவுசெய்யப்பட்ட ஓர் உறுப்பினர்.

(3) (அ) தோதான உயர்தொழிற் குழு ஒன்று இல்லாமையினால் (1) ஆம் உட்பந்தியின் கீழ் அமைக்கப்பெற்ற ஏதேனும் கற்கைச் சபை பன்னிரண்டுக்குக் குறைவான உறுப்பினரைக் கொண்டிருக்குமிடத்து, அதன் முழுத் தொகையைப் பன்னிரண்டாக்குவதற்கு வேண்டிய அத்தகைய எண்ணிக்கை கொண்ட ஆட்களை, மருத்துவ உயர்தொழில் உறுப்பினரிடையே இருந்து முகாமைச் சபை அத்தகைய கற்கைச் சபைக்கு நியமித்தல் வேண்டும்.

(ஆ) தோதான கற்கைப் பகுதி ஒன்று இல்லாமையினால் (1) ஆம் உட்பந்தியின் கீழ் அமைக்கப்பெற்ற ஏதேனும் கற்கைச் சபை பன்னிரண்டுக்குக் குறைவான உறுப்பினரைக் கொண்டிருக்குமிடத்து, அதன் முழுத் தொகையைப் பன்னிரண்டாக்குவதற்கு வேண்டிய அத்தகைய எண்ணிக்கை கொண்ட ஆட்களை, மருத்துவ உயர்தொழில் உறுப்பினரிடையே இருந்து முகாமைச் சபை அத்தகைய கற்கைச் சபைக்கு நியமித்தல் வேண்டும்.

(இ) இரண்டாம் உட்பந்தியின் கீழ் அமைக்கப்பெற்ற கற்கைச் சபை ஒவ்வொன்றுக்கும் அது தொடர்பாகவும், வாசகங்கள் (அ), (ஆ) என்பவற்றின் ஏற்பாடுகள், "பன்னிரண்டு உறுப்பினர்கள்" என்ற சொல்லமைப்பு எங்கெங்கு வருகின்றதோ அங்கெல்லாம் அதற்குப் பதிலாக "எட்டு உறுப்பினர்கள்" என்ற சொல்லமைப்பை இடுவதற்கமைய, ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) ஏதேனும் கற்கைச் சபை, முகாமைச்சபையின் ஒருப்பாட்டுடன், குறித்தவொரு நோக்கத்திற்கும் குறித்தவொரு காலப்பகுதிக்கும் ஆள் ஒருவரை அல்லது ஒருவருக்கு மேற்பட்ட எண்ணிக்கையினரான ஆட்களை உடன் சேர்க்கலாம் ; ஆனால் அவ்வாறு உடன் சேர்க்கப்பட்ட ஆள் எவரும் தேர்தலுக்கு நிற்கவோ அல்லது அத்தகைய கற்கைச்சபையின் எந்தக் கூட்டத்திலும் வாக்களிக்கவோ உரிமை கொண்டிருத்தலாகாது.

(5) பதினோராம் பந்தியின் (3), (4), (6) ஆகிய உட்பந்திகளின் ஏற்பாடுகள், ஏதேனும் கற்கைச்சபையின் ஒவ்வொரு தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்க்கும் அவர் தொடர்பாகவும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) ஒவ்வொரு கற்கைச்சபையும் ஒரு தவிசாளரைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அவரை அக்கற்கைச்சபை அதன் உறுப்பினருள் இருந்து தெரிவுசெய்தல் வேண்டும்.

(7) ஒவ்வொரு கற்கைச்சபையும் ஒரு செயலாளரைக் கொண்டிருத்தல் வேண்டும். அவர் அக்கற்கைச்சபையின் உறுப்பினராக இருத்தலாகாது என்பதுடன், முகாமைச் சபையால் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

(8) (அ) ஓராம் உட்பந்தியின் கீழ் அமைக்கப்பட்ட ஏதேனும் கற்கைச்சபையின் கூட்டத்திற்கான கூட்டநடப்பெண், உடன் சேர்த்த உறுப்பினர்கள் எவரும் இருந்தால் அவர்கள் நீங்கலாக, நான்கு உறுப்பினராதல் வேண்டும்.

(ஆ) இரண்டாம் உட்பந்தியின் கீழ் அமைக்கப்பட்ட ஏதேனும் கற்கைச் சபையின் கூட்டத்திற்கான கூட்டநடப்பெண், உடன் சேர்த்த உறுப்பினர்கள் எவரும் இருந்தால் அவர்கள் நீங்கலாக, மூன்று உறுப்பினராதல் வேண்டும்.

(9) ஒவ்வொரு கற்கைச்சபையும் அவசியமாகும்போதெல்லாம் கூடுதல் வேண்டும் ; எவ்வாருயினும், ஓர் ஆண்டுக்குப் பத்துத் நடவைகளுக்குக் குறையாமல் கூடுதல் வேண்டும்.

15. (1) சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, ஒவ்வொரு கற்கைச்சபையும் எம்மருத்துவக் கல்விச் சிறப்புக்கூறுடன் சம்பந்தப்பட்டதோ, அம்மருத்துவக் கல்விச் சிறப்புக்கூறிலுள்ள போதனை, கல்வி, ஆராய்ச்சி, தேர்வுகள் ஆகியவற்றின் கட்டுப்பாட்டையும் பொதுவான பணிப்பையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஒவ்வொரு கற்கைச்சபையும், (1) ஆம் உட்பந்தியினுல் அதற்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுத்தன்மைக்குப் பங்கமின்றி, சம்பந்தப்பட்ட மருத்துவக் கல்விச் சிறப்புக்கூறு தொடர்பில் பின்வரும் தத்துவங்கள், கடமைகள், பணிகள் ஆகியவற்றைப் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும் :—

(அ) முகாமையசபை அதற்கு ஆற்றுப்படுத்திய ஏதேனும் கருமத்தைச் சீர்தூக்கிப்பார்த்து அறிக்கை செய்தல் ;

(ஆ) அந்த மருத்துவக் கல்விச் சிறப்புக்கூறில் உள்ள கற்கைநெறிகள், கற்பிக்கும் நிகழ்ச்சித்திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டங்கள், தேர்வுகள் என்பன சம்பந்தமான எல்லாக் கருமங்கள் பற்றியும் முகாமைச்சபைக்கு விதப்புரைகளையும் அறிக்கைகளையும் சமர்ப்பித்தல் ;

(இ) சிறப்பான ஏதேனும் விடயத்தை அல்லது எவையேனும் விடயங்களைச் சீர்தூக்கிப்பார்த்து அதன்மீது அல்லது அவற்றின்மீது அறிக்கை செய்யும் நோக்கத்திற்காகக் கற்கைச்சபை உறுப்பினர் அல்லாத ஆட்களை உள்ளடக்கக் கூடிய குழுக்களை நியமித்தல் ;

(ஈ) கற்கைநெறிகள், தேர்வுகள் ஆகியவற்றுக்கு மாணவரை அனுமதிப்பதற்கான தேவைப்பாடுகளை முகாமைச் சபைக்கு விதந்துரைத்தல் ;

(உ) அந்த மருத்துவக் கல்விச் சிறப்புக்கூறிலுள்ள கற்கைநெறிகள், தேர்வுகள் ஆகியவை தொடர்பான ஒழுங்குவிதிகளை வரைதலும் அத்தகைய வரைவுகளை முகாமைச்சபைக்குச் சமர்ப்பித்தலும் ;

(ஊ) ஆசிரியர்கள், தேர்வாளர்கள் என்போராக அங்கீகாரம் பெறுவதற்குப் பொருத்தமான ஆட்களை முகாமைச் சபைக்கு விதந்துரைத்தல் ;

(எ) சம்பந்தப்பட்ட மருத்துவக் கல்விச் சிறப்புக்கூறில் விதித்துரைத்த தேர்வுகளில் சித்தியடைந்தவரும், விதித்துரைத்த வேறு நிபந்தனைகளைத் திருப்திசெய்தவருமான ஆட்களுள் எவர்கள் அந்தச் சிறப்புக்கூறிலுள்ள பட்டவகுப்புக்கு மேற்பட்ட பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள், வேறு கல்விச் சிறப்புகள் ஆகியவை அளிக்கப்படுவதற்குத் தகவுடையார் என முகாமைச் சபைக்கு விதந்துரைத்தல் ;

(ஏ) ஆராய்ச்சிப் படிப்புப் பரிசில்கள், புலமைப் பரிசில்கள், புலமைப் பொருளுதவிகள், ஏழைக் கல்வியுதவிகள், பதக்கங்கள், வேறு பரிசுகள் ஆகியனவற்றுக்கான போட்டிக்குரிய முறையையும் நிபந்தனைகளையும் முகாமைச்சபைக்கு விதந்துரைத்தல் ;

(ஐ) ஆராய்ச்சிப் படிப்புப் பரிசில்கள், புலமைப், பரிசில்கள் புலமைப் பொருளுதவிகள், ஏழைக் கல்வியுதவிகள், பதக்கங்கள், வேறு பரிசுகள் ஆகியன அளிப்பதற்குப் பொருத்தமான ஆட்களின் பெயர்களை முகாமைச்சபைக்கு விதந்துரைத்தல் ; அத்துடன்

(ஒ) முகாமைச் சபைக்கு பின்வருவனபற்றி விதந்துரைத்தல் :—

(i) இப்போதுள்ள கற்கைச்சபைகளை மீள அமைப்பதற்கும் புதிய கற்கைச் சபைகளை அமைத்தற்கும் ஆன திட்டங்கள் ; அத்துடன்

(ii) அந்தந்தக் கற்கைச் சபைகளுக்கு மருத்துவக் கல்வியிலுள்ள சிறப்புக்கூறுகளைக் குறித்தொதுக்குதல்.

16. அரசாங்கத்தின் நிதி ஆண்டு எதுவோ அதுவே நிறுவகத்தின் நிதி ஆண்டாதல் வேண்டும்.

17. (1) நிறுவகமானது பட்டவகுப்புக்கு மேற்பட்ட மருத்துவக் கல்வி நிறுவக நிதியம் என அழைக்கப்படும் ஒரு நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அது இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் ; அந்நிதியத்துள் பின்வருவன செலுத்தப்படுதல்வேண்டும் :—

(அ) ஏதேனும் தோதான சாதனத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நிறுவகத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள்;

(ஆ) அறக்கொடைகளிலிருந்து கிடைக்கும் வருமானம் ;

(இ) நிறுவகத்தின் உதவிக்கான மானியங்களாகப் பாராளுமன்றத்தினுல் வழங்கப்பட்டவையும் ஆணைக்குழுவால் செலவழிக்கப்பட்டவையுமான பணங்கள் ; அத்துடன்

(ஈ) எவ்வகையான மூலத்திலிருந்தும் பெறப்பட்டவையும், நிறுவகத்துக்குரியவையுமான வேறெல்லாப் பணங்களும்.

(2) குறித்த ஒரு மாதத்திற்குள் நிதியத்திற்குச் செலுத்தப்பட்ட பணங்கள் யாவற்றினதும் ஒரு பொழிப்பு, தோதான வருவாய்த் தலைப்புகளின் கீழ் வகுக்கப்பட்டு அடுத்துவரும் மாதத்தின் முடிவிற்குள், பணிப்பாளரால் ஆணைக்குழு அறிதற்காக அதற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

18. பணிப்பாளர் பின்வரும் கடமைகளை உடையவராயிருத்தல் வேண்டும்.—

(அ) நிறுவகத்தின் கணக்குகளைக் கட்டளைச்சட்டத்தால் விதித்துரைக்கப்படக்கூடியவாருன அத்தகைய படிவத்திலும் முறையிலும் வைத்திருத்தல் ;

(ஆ) நிதியத்துக்குச் செலுத்தப்பட்ட எல்லாப் பணங்களையும் பெற்றுக்கொள்ளுதலும் அத்தகைய பணங்களைத் தகுந்த கணக்குத் தலைப்புகளில் வரைவுவைத்தலும் ;

(இ) அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளையும் செய்தல் ; அத்துடன்

(ஈ) ஆணைக்குழு தேவையெனக் கோருகின்றவாருன அத்தகைய மூன்ருண்டுக்கொரு முறையான மதிப்பீடுகளையும், அடுத்துவரும் ஆண்டுக்கான ஆண்டு நிதி ஒதுக்கீடுகளையும் முகாமைச்சபைக்காகத் தயாரித்தல் ;

ஆயின், எவ்வாருயினும், குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட மானியங்களிலிருந்து அல்லது குறிப்பிட்ட குறிக்கோளுக்கான அறக்கொடைகளிலிருந்து பெறப்படும் வருமானம், நிறுவகத்தின் கணக்குகளில் தனித்தனியாகக் கணக்கு வைக்கப்படல் வேண்டும் என்பதுடன், நிறுவகத்தின் பொது நோக்கங்களுக்காக அல்லது அத்தகைய மானியங்கள் அல்லது அறக்கொடைகள் எந்நோக்கத்திற்காக அல்லது குறிக்கோளுக்காக முறையாக வழங்கப்பட்டனவோ, அந்நோக்கம் அல்லது, குறிக்கோள் அல்லாத வேறு நோக்கத்திற்காக அல்லது குறிக்கோளுக்காக அத்தகைய வருமானத்திலிருந்து கொடுப்பனவு எதுவும் செய்யப்படலுமாகாது.

19. (1) நிறுவகமானது, அதன் செயற்பாடுகள் தொடர்பான கணக்குகளையும் புள்ளிவிபரங்களையும் பற்றிய ஆண்டுக் கூற்றென்றை ஆணைக்குழு காலத்துக்குக் காலம் குறித்துரைக்கக்கூடிய அத்தகைய படிவத்திலும் முறையிலும், அத்தகைய விபரங்களைக் கொண்டதாகவும் தயாரித்தல் வேண்டும்.